# மலர் பயிர்கள் சாகுபடி

- ✓ மலர்களை நுட்பமாக வளர்க்கும் அறிவியல் மலரியல் என அழைக்கப்படுகின்றது.
- ✓ மலர்கள் சாகுபடி என்பது தோட்டக்கலை அறிவியலில் ஒரு பகுதியாகும்.
- ✓ மலர் பயிர்கள் பயிரிடுவதால் ஆண்டு முழுவதும் லாபம் பெற முடியும். மேலும் விற்பனைக்கான வாய்ப்பும் இந்த சாகுபடியில் அதிகம் உள்ளது.
- ✓ சில மலர்கள் பெண்கள் தலையில் சூடிக்கொள்ளவும், சில மருத்துவ பயன்பாட்டிற்கும், சில அலங்காரம் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.
- ✓ மலர்பயிர்களில் மல்லிகை, ரோஜா, முல்லை, சாமந்தி, செண்டுமல்லி, ஜாதிமல்லி, மரிக்கொழுந்து போன்றவை முக்கியமானவையாகும்.
- ✓ பொதுவாக மலர் பயிர் சாகுபடிகளுக்கு வடிகால் வசதிக் கொண்ட மண் ஏற்றது.

## சம்பங்கி

- ✓ சம்பங்கி சண்பகம் எனவும் அழைக்கப்படுகின்றது.
- ✓ சம்பங்கி மலர் அனைத்து விதமான விழாக்கள் மற்றும் விசேஷங்களில் பயன்படுத்தப்படுகிறது.
- ✓ சம்பங்கி நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக மகசூல் கிடைக்கும் பயிராகும். எனவே சம்பங்கி மலருக்கு எப்பொழுதும் நல்ல வரவேற்பு உள்ளது.
- ✓ தினமும் வருமானம் ஈட்டித் தரும் மலர்களில் முக்கிய பங்கு வகிக்கிறது சம்பங்கி.

### இரகங்கள்

மெக்சிகன் சிங்கிள், சிருங்கார், பிரஜ்வால், பியர்ள் டபுள், சுவாசினி, வைபவ் ஆகிய இரகங்கள் சாகுபடிக்கு உகந்தது. பிரஜ்வால் இரகம் அதிக மகசூல் தரவல்லது.



## காலநிலை

சம்பங்கி மலர் சாகுபடிக்கு ஏற்ற காலம் ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் ஆகும்.

## மண்

நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண் சாகுபடிக்கு ஏற்றது. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருத்தல் வேண்டும்.

## நிலம் தயார் செய்யும் முறை

நிலத்தை நன்கு உழுது தொழு உரம், வேப்பம் பிண்ணாக்கு, மண்புழு உரம் போன்றவற்றை அடி உரமாக இட்டு நன்கு உழ வேண்டும். இவ்வுரங்கள் மண்ணுக்கு தேவையான சத்துக்களைப் பெற்று தரும்.

## விதை நேர்த்தி

விதைகளை விதைப்பதற்கு முன் ஜீவாமிர்தக் கரைசலில் விதைக்கிழங்குகளை ஊற வைத்து, அதை நிலழில் உலர்த்திக் கொள்ள வேண்டும். விதை நேர்த்தி செய்வதால் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

## விதைத்தல்

விதைக் கிழங்குகளை பாத்திகளில் 45 செ.மீ. இடைவெளியில் பாத்திகளில் 20 செ.மீ. இடைவெளிகளில் 2 செ.மீ ஆழத்தில் கிழங்குகளை விதைக்க வேண்டும்.

## உர மேலாண்மை

உயிரி உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் செடிகள் நன்கு வளரும். வாரம் ஒரு முறை மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசல், மீன் அமிலம் கலந்து பாசன நீரில் விட வேண்டும். தேங்காய்ப்பால் மோர் கரைசல், மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசல் ஆகியவற்றை பத்து நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும்.

## நீர் நிர்வாகம்

விதைத்தவுடன் நீர்ப் பாய்ச்ச வேண்டும். அதன் பின் ஒரு வாரம் கழித்து நீர்ப் பாய்ச்ச வேண்டும். சம்பங்கிக்கு சொட்டுநீர் பாசனம் சிறந்தது.



## ஊடுபயிர்

சம்பங்கி பயிரிடும் போது ஊடுபயிராக தட்டைப்பயறு, சோளம், துவரை, ஆமணக்கு போன்ற பயிர்களை பயிரிடலாம்.

ஊடுபயிர்கள் நன்மை பயக்கும் விதமாக நூற்புழுக்களையும், பூச்சி, நோய்களையும் கட்டுப்படுத்தும்.

### களை நிர்வாகம்

சம்பங்கியை பொறுத்தவரை கைகளினால் களை எடுப்பதே சிறந்தது. விதைத்த 20 நாட்களில் இருந்து 10 நாட்களுக்கு ஒரு முறை களை எடுக்கலாம்.

சம்பங்கியில் ஊடுபயிராக சணப்பு பயிர் சாகுபடி செய்தால் களை முளைப்பதை தடுக்கலாம். சணப்பு பயிர் பூக்கும் முன் மண்ணுடன் சேர்த்து

உழுவதால், 5 முதல் 6 வாரத்துக்குள் நன்றாக மக்கி பயிருக்கு நல்ல உரமாக மாறிவிடும்.

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

நடவு செய்த 10 நாட்களில் வேர் பிடித்து, துளிர்க்க ஆரம்பிக்கும். ஒரு மாதத்தில், செழித்து வளர ஆரம்பிக்கும்.

சம்பங்கியை அதிகமாக இரண்டு வகையான பூச்சிகள் தாக்கும். மொட்டுத்துளைப்பான் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகள்.

மொட்டு துளைப்பான் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கற்பூர கரைசல் தெளிப்பதன் மூலம் முழுமையாக கட்டுப்படுத்தலாம். 5 நாள் இடைவெளியில் கற்பூரகரைசல் தொடர்ந்து அளித்து கொண்டே இருக்க வேண்டும். இதனால் பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை முற்றிலும் பாதுகாக்கலாம்.

சம்பங்கியை தாக்கும் நூற்புழுவை கட்டுப்படுத்த உன்னிச்செடி, எருக்கன் செடி ஆகியவற்றை இடித்து அத்துடன் சாணம், பசு மாட்டுச் சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து கொள்ள வேண்டும். இக்கரசலை தண்ணீரில் கரைத்து 5 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இந்தக் கரைசலை ஒவ்வொரு செடிக்கும் ஊற்றி வர வேண்டும். இதன் மூலம் நூற்புழுவை கட்டுப்படுத்தலாம்.

வேர் அழுகலுக்கு சோற்றுக் கற்றாழையை பயன்படுத்தி நோயை கட்டுப்படுத்தலாம்.

## அறுவடை

நடவு செய்து மூன்றாம் மாதத்தில் இருந்து மொட்டு வைக்க ஆரம்பிக்கும். நான்காம் மாதம் முதல் தினமும் பூக்களை அறுவடை செய்யலாம்.

## மகசூல்

சம்பங்கி நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக மகசூல் கிடைக்கும். சம்பங்கிக்கு எப்பொழுதும் மார்கெட்டில் விலை அதிகம்.

## சம்பங்கி பூவின் பயன்கள்

- சம்பங்கி பூ விழாக்காலங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மாலைகள் கட்டவும், பூஜைகளுக்கும் இந்த மலர் பயன்படுத்தப்படுகிறது.

- இந்த சம்பங்கி பூவின் சாறு நறுமணப் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.
- சம்பங்கி பூவில் ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளது. இதன் விதை, இலை என அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டவை.
- கோடை வெயிலால் ஏற்படும் வேர்க்குரு போன்ற சரும பிரச்சனைகளுக்கு சம்பங்கி பூ தைலம் பயன்படுகிறது.
- மேலும் இந்த தைலம் மூலம் உடல் குளிர்ச்சியாகவும், வாசனையாகவும் இருக்கும்.
- ஒரு கைப்பிடி அளவு சம்பங்கி பூவை கொதிக்கும் நீரில் போட்டு, வாரம் இருமுறை ஆவி பிடித்து வந்தால், முகத்தில் ஏற்பட்ட தழும்புகள் மறைந்துவிடும்.
- சம்பங்கி இலையை அரைத்து பாதங்களில் தடவி வந்தால் பாத வலி நீங்கும்.
- இந்த பூவினால் தயார் செய்யப்பட்ட கசாயம் செரிமான பிரச்சனையை சரி செய்யும் தன்மையுடையது.

## செண்டுமல்லி

பல தோட்டங்களில் அழகுக்காக செண்டுமல்லிகள் வளர்க்கப்படுகிறது. இந்த மலர்களில் இருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகின்றன.

வாசனை திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும் பயன்படுகிறது.

### ரகங்கள்

செண்டுமல்லியில் மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற வகை ரகங்கள் உள்ளன.